# Hindu Civilization

# பதுளை மாவட்ட அப்புத்தளைப் பிரதேசத்தில் சிறுதெய்வ வழிபாடு

**Supervisor**
*Mr. N. Subaraj,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts & Culture*
*SEUSL*

**Researcher**
*Miss. J. Lingeswary,*
*Department of Languages,*
*Faculty of Arts & Culture*
*SEUSL*

## ஆய்வுச் சுருக்கம்

ஆங்கிலேயர் காலத்தில் இலங்கையில் கோப்பித்தோட்டங்களும், தேயிலைத்தோட்டங்களும் அமைக்கப்பட்ட போது அத்தோட்டங்களில் கூலித்தொழில் செய்வதற்கு இந்தியாவில் இருந்து கூலித்தொழிலாளர்கள் அழைத்து வரப்பட்டனர். திராவிட இனத்தைச் சேர்ந்த இம்மக்கள் மலையகப் பிரதேசத்தில் குடியமர்த்தப்பட்டமையால் மலையக மக்கள் என அழைக்கப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் இந்துக்களாவர். இவர்கள் தாம் குடிபுகுந்த நாட்டில் மதநம்பிக்கைகள், மதச்சடங்குகள் என்பவற்றினை பேணி வந்தனர்.

மலையக மக்கள் வாழ்வில் சமயம் பின்னிப்பிணைந்துள்ளது. ஊவா மாகாணத்தில் உள்ள அப்புத்தளைப் பிரதேசம் மலையக மக்கள் செறிந்து வாழும் இடமாகும். இப்பிரதேசம் ஆய்வின் எல்லையாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இந்துமத சிறுதெய்வ வழிபாடு அப்புத்தளையில் மிகவும் பிரபல்யம் அடைந்ததொன்றாகும். இவ்வழிபாடு இம்மக்களின் நாளாந்த வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கிறது. அவ்வடிப்படையில் அப்புத்தளைப் பிரதேச சிறுதெய்வ வழிபாடு பற்றியும் அவ்வழிபாடு மக்களின் வாழ்வில் எத்துணையளவு தாக்கம் செலுத்தி வருகின்றது என்பதனையும் இவ்வாய்வு அலசுகின்றது.

இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது

1. மலையகப் பிரதேசமான அப்புத்தளைப் பிரதேச மக்களால் மேற்கொள்ளப்படும் சிறுதெய்வ வழிபாடானது, சமூகக் கட்டமைப்பில் எந்தளவு பங்களிப்பு செய்கிறது என்பதனை இனங்காணல்.
2. அப்புத்தளைப் பிரதேசத்திலுள்ள சிறுதெய்வ வழிபாடுகளின் தொன்மையையும் தனித்துவங்களையும் அடையாளப்படுத்தல்.
3. அப்புத்தளைப் பிரதேச மக்களின் சிறுதெய்வ வழிபாடு தொடர்பாக நிலவும் வாய்மொழிக் கதைகளில் உள்ள வரலாற்று மூலங்களை இனங்காணல்.
4. சிறுதெய்வ வழிபாட்டிற்கும், இப்பிரதேச சமூக வரலாற்றுக்கும் இடையிலான ஊட்டங்களை வெளிக்கொணர்தல்.

சமூகத்தில் மக்களின் தகுதி நிலைகள் விலக்கப்படுவதோடு சமூகத்தின் ஒன்றுபட்ட நடத்தை முறைக்கு வழிகோலும் அம்சமாக சிறுதெய்வ வழிபாடு உள்ளதென்பதை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டுள்ளது. அப்புத்தளைப் பிரதேசத்தில் சிறுதெய்வ வழிபாடானது தொன்மையாகவும், தனித்துவமுள்ளதாகவும் அப்பிரதேச சமூக பண்பாடுகளில் பங்களிப்பு செய்வதாகவும் காணப்படுவதோடு சமூக முரண்பாடுகளை களையும் ஒரு நிகழ்வாகவும் உள்ளது. என்பது ஆய்வின் கருதுகோளாகும்.

இவ்வாய்வில் சமூகவியல், மொழியியல், ஒப்பியல், விளக்கமுறை, வரலாற்றியல், கோட்பாட்டியல் போன்ற ஆய்வு முறைகள் பயன்படுத்தப்படவுள்ளன. இவ்வாய்விற்காக முதலாம் தர மூலங்களாக, அப்புத்தளைப் பிரதேச இந்துமக்கள், பூசகர் ஆகியோரிடம் பெறப்பட்ட நேர்காணல், கள ஆய்வின் மூலம் பெறப்படும் தகவல்கள், அவதானமுறை மூலம்

பெறப்படும் தகவல்கள், மாதிரி எடுப்பின் மூலம் பெறப்பட்ட நபர்களினால் நிரப்பப்பட்ட வினாக்கொத்துக்களின் முடிவுகள் முதலியவை பயன்படுத்தப்படும். இரண்டாம் நிலைத் தரவுகளாக, சிறுதெய்வ வழிபாடு தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள், ஒலி,ஒளி நாடாக்கள், இறுவட்டுக்கள், இணையத்தள குறிப்புகள் என்பன பயன்படுத்தப்படும்.

"பாமர மக்களால் ஆழமாக உணரப்பட்டு பின்பற்றப்பட்டு வருகின்ற நம்பிக்கைகள் ஒரு தலைமுறையில் இருந்து அடுத்த தலைமுறைக்கு அழிக்கப்பட்டு வரும் சடங்குகளின் தொகுதியே சிறுதெய்வ வழிபாடு" என வரைவிலக்கணப்படுத்தலாம். சிறுதெய்வங்கள், தெய்வங்களைக் குறிக்கும் நம்பிக்கைகள், நம்பிக்கை வழிவந்த சடங்குகள் ஆகிய அம்சங்களைக் கொண்டதே சிறு தெய்வ வழிபாடாகும். பொதுவாக இந்தியாவின் பூர்வீகக் குடிகளான திராவிடர்களின் ஒரு வழிபாடாக இச்சிறுதெய்வ வழிபாடு கருதப்படுகின்றது.

சிறுதெய்வம் நாட்டுப்புறதெய்வம், கிராமியதெய்வம், காவல்தெய்வம், குலதெய்வம், திராவிடதெய்வம் என பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. சிறுதெய்வ வழிபாடானது இந்துமத ஆகம வழிபாட்டிலிருந்து வேறுபட்டதொன்றாகும். இச்சிறுதெய்வ வழிபாடு இலங்கையின் மலையகப் பிரதேசத்தின் அப்புத்தளையில் அதிக செல்வாக்குப் பெற்றதொன்றாகும். பத்தினியம்மன், காளியம்மன், ஆத்துக்காளி, ஏழுகன்னிகள், மதுரைவீரன், மாடசாமி, முனி, ரோதைமுனி, கருப்பன்சாமி, செண்டாக்கட்டி, கவ்வாத்துச்சாமி, மலைச்சாமி, மின்னிடையான், வைரவர், இடும்பன் ஆகிய தெய்வங்கள் பெரும்பாலும் அப்புத்தளைப் பிரதேச மக்களால் வழிபடப்படும் சிறுதெய்வங்களாகும்.

சிறுதெய்வம் உயிருள்ள மனிதனுக்கு சமமானது. அது மனிதனைப் போல் உண்டும், குடித்தும், உறங்கியும், தன்னைப் பேணும் மனிதனை பாதுகாத்தும், கொடிய பகைவனாகி அவர்களை அழித்தும் விடுகின்றது என்பது இவர்களின் நம்பிக்கை. இவ்வழிபாடு சாதி அடிப்படையிலும் தொழில் அடிப்படையிலும் இடம் பெறுகின்றது. சிறுதெய்வ வழிபாடானது சமூகத்தில் நிலவுகின்ற ஏற்றத்தாழ்வுகளை புலப்படுத்துவனவாக விளங்கிய போதும் ஒரே தொழிலை புரிவோரையும், உறவினர்களையும் சமூகத்தினையும் ஒன்றிணைக்கவும் மக்களது வாழ்வில் பற்றுதலையும் நம்பிக்கையையும் மன அமைதியையும் ஏற்படுத்தவும் உதவுகிறது.

**திறவுச் சொற்கள் (keywords):** சிறுதெய்வங்கள், வழிபாடு, சமூக ஒன்றிணைப்பு